1970 ஏப்ரல் 3]

கவனிப்பதற்குத் தனியாக அதிகாரிகள் இருக்கிறார்கள். அதைப் பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

மேட்டூரில் தொழிலாளர் ஈட்டுறுதித் திட்டம்

*674 வினா—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மேட்டூரில் உள்ள தொழிற்சாலைகள் ரசாயனப் பொருள் களையும், அலுமினியத்தையும் உற்பத்தி செய்வதாக இருப்பதினால், அவைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ESI. வசதிகள் கிடைப்பதற்கான துரித நடவடிக்கைகளை அரசு எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இப்போது மேட்டூர் வட்டாரத்தில் 9 தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ. திட்டம் மூலம் மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. இன்னும் இ.எஸ்.ஐ. திட்டத்தில் சேராத நான்கு தொழிற் சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு, புதுடில்லி இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனின் அனுமதி கிடைத்தவுடன் இத்திட்டம் அமல் படுத்தப்படும்.

திரு. பி. வேலுசாமி: மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையும், ரசாயனத் தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகியும் இ.எஸ்.ஐ. திட்டத்தில் இன்னும் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை. அது எப்போது சேர்த்துக் கொள்ளப்படும்? இப்போது இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் படுக்கைகள் குறைவாக இருக் கின்றன. அது அதிகப்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை, ரசாயனத் தொழிற்சாலை இருக்கும் பகுதி யில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன்தான் இந்த அரசாங்கம் அதற்கு வேண்டிய செயற்குறிப்புகளைத் தயாரித்து டில்லியில் இருக்கும் இ.எஸ்.ஐ. கார்ப்பரேஷனுக்கு அனுப்பி இருக்கிறோம், அவர் கள் அனுமதி கொடுக்க தயங்கிக் கொண்டிருக்கிறார்கள் நாங்கள் மேற்கொண்டு தீவிரமாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். இருநூற்று ரூபாய் வாடகையில் ஒரு இடம்கூட எடுத்து வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

திரு. சு. துரைசாமி : இ.எஸ்.ஐ. திட்டத்தின்கீழ் தமிழ் நாட்டில் திருப்பூர் போன்ற இடங்களில் இ.எஸ்.ஐ. மருத்துவ மனை கட்டுவதாக இருந்து ஒத்தி வைக்கப்பட்டிருப்பதற்கு என்ன காரணம் ?

[1970 ஏப்ரல் 9

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன்: என்ன காரணம் என்பதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்னுல் விடை சொன்னேன்.

பர்மாவிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்கு ஸ்ரீரங்கத்தில் கட்டப்பட்ட கடைகள்

*658 **வினு—திரு. கரு. சிமைச்சாமி:** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பர்மிய அகதிகளுக்காக திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கத்தில் கடைகள் கட்டப்பட்டுள்ளனவா?

இ) ஆம் என்ருல்ல அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) ஆம்.

(இ) பர்மா அகதிகளுக்காக பன்னிரண்டு கடைகளும், சாலேக்கடைகளும் ஸ்ரீரங்கம் நகராட்சியால் கட்டப்பட்டன. பர்மா அகதிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் இல்லாததால் அவை அனைத்தும், அகதிகளில்லாத பிறருக்கு 1—12—1969 முதல் ஒரு ஆண்டுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: பர்மாவிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளுக்குக் கட்டிக் கொடுக்கும் கடைகளேக் குறைந்த அளவு வாடகையில் கொடுக்க அரசு முயற்சிக்குமா? சென்னையிலும் அது போன்று கட்டிக் கொடுக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படித்தான் முயற்சிக்கப்படுகிறது. 549 கடைகள் கட்டப்பட்டன. 422 கடைகளேப் பர்மா அகதிகள் எடுத்துக் கொண்டிருக்கிருர்கள். குறி பிடட காலம் வரை பார்த்து யாரும் வராத காரணத்தான் பிறருக்கு மீதமுள்ள கடைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 67 பெட்டிக் கடைகள் முனிசிபாலிடிக்குப் பணம் கொடுத்து பர்மா அகதிகளுக்காகக் கட்டியும் பர்மா அகதிகள் வரவில்லே. பத்திரிகைகளில் எல்லாம் கூட அதுபற்றிப் பிரசுரிக்கப் பட்டிருக்கிறதி இதுதான் இப்போது இருக்கும் நிலே.

திரு. எம். எஸ். மணி: திருச்சி நகரத்தில் இரண்டு இடங்களில் பர்மா அகதிகளுக்குக் கடைகள் கட்டிக் கொடுக்கவேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டது, அமைச்சர் அவர்களிடமும் நேரடி யாகத் தரப்பட்டது. அந்தக் கடைகளே உடனடியாகக் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அது பரிசீலிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன்: திருச்சி, ஸ்ரீரங்கத்தில் எவ்வளவு கடைகள் பர்மா அகதிகளுக்காகக் கட்டப்பட்டன? எத்தனை இடங்களில் அவர்கள் கடைகள் வைத்திருக்கிருர்கள்?